Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 266/2014**

வழக்கு சாட்சி எண். PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | கிராமம் | : | தருமபுரி |
| தந்தை பெயர் | : | ராஜவேல் | தாலுக்கா | : | தருமபுரி |
| வயது | : | 50 | மாவட்டம் | : | தருமபுரி |

( 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 எதிரிகள் சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).
இந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் எதிரி இறந்துவிட்டபடியால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய்விட்டது.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th** Day of **April 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 11.03.2013ம் தேதி அரூர் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது ரகு த/பெ சுப்ரமணி என்பவரை அவரது தந்தை சுப்ரமணி அதிகாலை 12.30 மணியளவில் சிகிச்சைக்கு அழைத்துவந்தார். அவரை பரிசோதித்தபோது அவர் தன்னை தெரிந்த 6 நபர்கள் கட்டையால் 10.03.2013ம் தேதி இரவு 7.00 மணியளவில்

அவரது வீட்டில் தாக்கியதாக கூறினார்.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து நான் சிகிச்சை வழங்கினேன் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் தென் பட்டன. 1) 3x1x1cm அளவிலான கிழிந்த காயம் நெற்றியில் காணப்பட்டது. 2. 5x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் வலது பக்க கழுத்தில் காணப்பட்டது. 3. 5x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் இரண்டாவது காயத்திற்கு மேல் காணப்பட்டது. 4. 3x2cm அளவிலான சிராய்ப்பு காயம் வலது தோள்பட்டையில் காணப்பட்டது. எனவே அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என நான் கருத்து வழங்கினேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் அசா1ன் காயச்சான்றிதழ் நான் வழங்கியதுதான். காயச்சான்றிதழ் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் சுயநினைவுடன் தான் இருந்தாரா என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் அனைத்து காயம்பட்ட நபர்தான் சொன்னாரா என்றால் சரிதான். காயம்பட்ட நபருடன் வந்தவர் அவரது தந்தை. சம்பவம் நடந்த நேரம் இரவு 7.00 மணி என்றும் ஆனால் சிகிச்சைக்காக இரவு 12.00க்கு மேல் தான் வந்தார்கள் என்றும் இது சுமார் 6 மணி நேரம் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட நபர் 108 வாகனத்தின் மூலம் வந்ததா என்றால் அதைப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது. விபத்து பதிவேட்டில் 6 நபர்களால் காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளார். ஆனால் அவரின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதில் எந்த காயம் யாரால் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 6 மணி நேரம் காலதாமதமாக

வந்துள்ளதால் அவர்கள் வேறு எங்கேயாவது முதல் உதவி பெற்றார்களா என்ற விவரம் உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. காயம்பட்ட நபர் எவ்வளவு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்லமுடியும். மேற்படி காயங்கள் ஒரு நபர் கீழே தவறி விழும்போது ஏற்பட வாய்புள்ளதா என்றால் உள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**